# ● மனித உரிமைகள் தினத்தன்று கொழும்பில் அன்னையர் முன்னணி மீது பொலிஸார் தாக்கு

(கொழும்பு)
மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு கொழும்பில் அன்னையர் முன்னணி நேற்று அமைதியான முறையில் சத்தியாக்கிரஹம் ஒன்றைநடத்த முற்பட்டனர். எனினும பொலிசாரும் கலகஞர படையும் கண்ணீர் புகைக் (4-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 5-00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 கார்த்திகை 26 இதழ் 304
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 11 — 12 — 1992

## திலகரின் கோரிக்கைக்கு அரசு மறுப்பு

(மணிலா)
தமிழீழ விடுதலைப்புலிகள் பிரமுகர் திரு. லோறன்ஸ்திலகர் இலங்கை அரசுடன் சமாதான பேச்சுவார்த்தைக்கு விடுத்த அழைப்பை அரசு நிராகரித்துள்ளது என்று அமைச்சர் ரணில் விக் (4-ம் பக்கம் பார்க்க)

## பாரிய தாக்குதலுக்கு ராணுவம் தயாராகிவருகிறது

(கொழும்பு)
யாழ். குடாநாட்டின் மீது பலத்த தாக்குதல் நடாத்தும் திட்டங்களில் தயாராகி வருகின்றன என்று இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்: குடாநாட்டின் மீதான (4ம் பக்கம் பார்க்க)

# நுணுவிலில் சுப்பசொனிக் தாக்கு இருவர் பலி; 15 பேர் படுகாயம்!

## க. பொ. த. பரீட்சார்த்திகள் சிதறி ஓடினர்

(சாவகச்சேரி)
சாவகச்சேரியிலுள்ள மட்டுவில். நுணுவில் பகுதிகளில் இரு சுப்பசொனிக் விமானங்கள் நேற்று நடத்திய தாக்குதலில் அப்பாவிப் பொதுமக்கள் இருவர் துடிதுடித்துப் பலியானார்கள். பதினைந்துக்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். பல வீடுகள் சேதமடைந்தன.

நேற்றுக்காலை சுமார் 8 15 மணியளவில் தென்மராட்சிப் பகுதியை நோக்கி பேரிரைச்சலுடன் வந்த இரு சுப்பசொனிக் விமானங்கள் நுணுவில் மேற்குப் பகுதியில் திடீரென குத்திப்பதிந்து ரொக்கெட் தாக்குதலை நடத்தின.

இத்திடீர்தாக்குதலினால் தென்மராட்சிப்பகுதி மக்கள் வயல் பகுதிகளிலும் மற்றும் வெளியான இடங்களிலும் குப்புறப் படுத்தினர். வீதிகளில் சைக்கிள் மற்றும் வாகனங்களில் சென்றவர்கள் அந்தந்த இடங்களிலே பெரும்பீதியுடன் விழுந்து படுத்தனர்.

ஸ்...... ஸ்...... என்றபெரும் இரைச்சலுடன் தென்மராட்சியை வட்டமிட்ட இந்த விமானங்களினால் பெரும் பதற்றம் ஏற்பட்டது. பலர் அதிர்ச்சியடைந்த நிலையில் மயக்கமடைந்தனர்.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, மகளிர் கல்லூரி, இந்து கல்லூரி ஆகிய பாடசாலைகளில் க. பொ. த (சாதாரண) பரீட்சைக்குத்தோற்றச் சென்ற மாணவர்கள், விமானங்களின் இரைச்சலினால் செய்வதறியாது சிதறியோடினார்கள். பலர் அதிர்ச்சியினாலும் பயத்தினாலும் ஓலமிட்டனர்.

நுணுவில்குளம், மருதங்குளம் பகுதிகளில் இரு விமானங்களும் மாறிமாறி ஆறு தடவைகள் ரொக்கட் தாக்குதலை மேற்கொண்டன. சுமார் அரைமணிநேரம் இத்தாக்குதல்கள் இடம்பெற்றன (4-ம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் 15 நிமிடங்கள் பிந்தியே க.பொ.த. பரீட்சை ஆரம்பம்

(சாவகச்சேரி)
மட்டுவில், நுணுவில் பகுதியில் 'சுப்பசொனிக்' விமானங்கள் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதல்களினால் ஏற்பட்ட அச்ச நிலையைத் தொடர்ந்து தென்மராட்சி பகுதியிலுள்ள சில பாடசாலைகளில் 15நிமிடங்கள் பிந்தியே க பொ. த (சாதாரண) பரீட்சை ஆரம்பமானது.
(4-ம் பக்கம் பார்க்க)

## களுதாவளை, பாண்டிருப்பு படையால் சுற்றிவளைப்பு

(மட்டுநகர்)
மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள களுதாவளை, பாண்டிருப்பு ஆகிய இடங்களில் தமிழர் வசிக்கும்பகுதிகள் அதிரடிப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை இப்பகுதிக்கு வந்த சிறிலங்கா அதிரடிப்படையினர் திடீரென (4ம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு புனர்நிர்மாண வேலைக்கு 38 கோடி டொலர் உதவி

(கொழும்பு)
வடக்கு-கிழக்குப் பகுதியில் மேற்கொள்ளப்படவிருக்கும் புனரமைப்பு வேலைகளுக்கு வெளிநாடுகள் 38 கோடி 80 லட்சம் அமெரிக்க டொலர்களை உதவியாக வழங்க உறுதி அளித்துள்ளன என்று புனர்வாழ்வு அமைச்சர் தயா (4-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்கில் பணிபுரியும் மின்சாரசபை ஊழியர்க்கும் ஆபத்து அலவன்ஸ் வழங்க முடிவு

(மானிப்பாய்)
வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் இலங்கை மின்சாரசபை ஊழியர்களுக்கு ஆபத்து அலவன்ஸ் வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாக அதன் தலைவர் எப். ஏ. ஜே. பெரேரா அறிவித்துள்ளார்.
(4ம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்னைக்கு தீர்வு ஏற்பட்டாலே கனடாவிலுள்ள ஈழத்தமிழரை திருப்பி அனுப்பமுடியும்

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு தீர்வுகாணப்பட்டு சுமுகநிலை ஏற்பட்டால் மட்டுமே கனடாவில் வாழும் இலங்கைத்தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதென கனேடியப் பேராசிரியர் மாரசிங்க தெரிவித்துள்ளார்.
அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்பும் விடயம் தொடர்பாக ஆராய கனடா இலங்கைக்கு இவரை அனுப்பி வைத்தது. அவர் இலங்கை (4ம் பக்கம் பார்க்க)

## குஜராத்தில் 24 ரயில் பிரயாணிகள் குத்திக்கொலை

(புதுடில்லி)
அயோத்தி பிரச்னையின் எதிரொலியாக நேற்று குஜராத் மாநிலத்தில் 24 ரயில் பிரயாணிகள் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டனர்.
இறந்தவர்களின் சடலங்கள் ரயிலிலிருந்து வெளியே தூக்கி எறியப்பட்டதாக இராம (4-ம் பக்கம் பார்க்க)

## அயோத்தி சம்பவத்தை கண்டித்து தமிழகத்தில் நேற்று பொதுவேலை நிறுத்தம்

(சென்னை)
அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதை கண்டித்து தமிழகத்தில் நேற்று பொது வேலை நிறுத்தம் நடத்தப்பட்டது.
பாரதிய ஜனதா கட்சியைத் தவிர அனைத்துக் கட்சிகளும் இப்பொது வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.
(4ம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் சம்பவங்கள் கவலைதருகின்றன - பிஷப் கன்ரபரி

(கொழும்பு)
சிறிலங்கா அரசு அப்பாவிகள். ஒடுக்கப்பட்டோர். சிறுபான்மையினர் ஆகியோர் மீது அடாவடித்தனங்களையும், அநீதியையும் இழப்பது அநியாயம் என்று லண்டனிலிருந்து இலங்கை வந்திருக்கும் கன்ரபரி அதிமேற்றிராணியார் தெரிவித்துள்ளார்.
(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வாங்க முந்துங்கள்

பாமரர் தொட்டு பண்டிதர் வரை தெரிந்துகொள்ளவேண்டிய அத்தனையும் அஷ்டலக்ஷ்மி தினத்தாள்கலண்டரில் உண்டு. சொற்ப தொகையே வெளியிட்டுள்ளதால் வாங்க முந்துங்கள். (இ-7032)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பாஷையூர் சிக்கன கடனுதவி சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை 12ம் திகதிசனிக்கிழமைசங்கத் தலைவர் திரு. எஸ். கே. செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. (வி)

## சைக்கிள் திருட்டு

(ஆனைப்பந்தி)

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச்சங்க இயக்குனர் ஏ. பசுபதியின் சைக்கிள் யாழ். நகரில் திருடப்பட்டுள்ளது. (101)

## உரம் விநியோகம்

(கொழும்புத்துறை)

நவாலி வடக்கு பகுதியில் உள்ள 18 விவசாயிகளுக்கு அமெரிக்க 'கெயர்' ஸ்தாபனம் உரவிநியோகம் மேற்கொள்ள சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. (154)

## தமிழகத்தில் 1500 பேர் கைது

(சென்னை)

தமிழகத்தில் நேற்று நடைபெற்ற பொது வேலைநிறுத்தத்தை முன்னிட்டு 1500 பேர் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழகப் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். (க)

28 குடும்பங்களுக்கு

## வீடமைக்க உதவி

(சித்தன்கேணி)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 28 குடும்பங்களுக்கு உள்ளூர் மூலப்பொருட்களைக் கொண்டு வீடுகளை அமைப்பதற்கு நன்கொடையாக ஒவ்வொரு குடும்பதிற்கும் ரூபா 5,000 வழங்கப்பட்டுள்ளது. (137)

கூட். சங்கங்களுக்கு

## வியாபாரக் கடன் வழங்கப்படும்

(ஆனைப்பந்தி)

யாழ் மாவட்ட சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் யாழ். மாவட்டத்தில் உள்ள சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்கள் தவிர்ந்த ஏனைய கூட்டுறவுச் சங்கங்களை இணை அங்கத்துவ சங்கமாகச் சேர்த்து அச்சங்கங்களுக்கு நான்கு லட்சம் ரூபாவுக்கு மேற்படாத தொகையினை வியாபாரக் கடனாக வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது. (101)

## ம. எண்ணெய் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கத்தில் அப்பகுதி மக்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்ட ஐந்து லீற்றர் மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்ளாதவர்கள் இம்மாதம் 15-ம் திகதிக்குள் பெற்றுக்கொள்ளலாம்.

## வட்டக்கச்சி கி. அ. சங்கம்

(யாழ்ப்பாணம்)

வட்டக்கச்சியில் கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்று புதிதாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதற்கான கூட்டம் வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் செல்வி நா. இந்துமதி தலைமையில் அண்மையில் நடைபெற்றது. (சு)

## ஓய்வூதிய கொடுப்பனவு

(ஆனைப்பந்தி)

புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுவோர்க்கான நவம்பர் மாதக் கொடுப்பனவு தற்போது இடைக்கலமாதா தேவாலயத்திற்கு அருகில் உள்ள மேற்படி சங்க கிராமிய வங்கியில் பணமாக வழங்கப்பட்டு வருகின்றது. (101)

## ஆசிரியர்களின் சம்பளத்தை முன்கூட்டியே வழங்க உத்தரவு

(உடுவில்)

டிசம்பர்மாதத்துக்குரியஆசிரியர்களுக்கான சம்பளப் பணத்தை இம்மாதம் 18ம் திகதி வழங்குமாறு வடக்கு-கிழக்குமாகாணக்கல்வியமைச்சின் பிரதம கணக்காளர் திரு. எஸ். வேலாயுதபிள்ளை அறிவித்துள்ளார்.

இம்மாதத்தில் வரும் கிறிஸ்மஸ், வருடாந்தக்கொண்டாட்டங்களை முன்னிட்டு சம்பளத்தினை முன்கூட்டியே வழங்கவும், அதற்கான பணிகளில் ஈடுபடும் ஊழியர்களுக்கு மேலதிக நேரவேலைஉத்தரவை வழங்கவும், மேலதிக வேலைக்கான பணத்தினை வழங்கவும் அவர் அனுமதி வழங்கியுள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதம கணக்காளர் திரு. எஸ். வேலாயுதபிள்ளை, மாவட்ட கல்விப்பணிப்பாளர், கோட்டக்கல்வி பிரதிக்கல்விப்பணிப்பாளர்களுக்கு அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையில் இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. (109)

## ஆசிரியர்களுக்கு ஆபத்துக்கால ஊக்குவிப்பு அலவன்ஸ் வழங்கப்படும்

(உடுவில்)

1990ம் ஆண்டு ஜூன் மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையுள்ள காலப்பகுதிக்கு வடமாகாணத்திலுள்ள பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வித் திணைக்கள ஊழியர்கள் ஆகியோருக்கு ஆபத்துக்கால ஊக்குவிப்பு அலவன்ஸ் வழங்கப்படவுள்ளது.

தமிழர் ஆசிரியர் சங்கத் தூதுக்குழுவினர் கல்விஅமைச்சின் அதிகாரிகளுடன் மேற்கொண்ட சந்திப்பு உரையாடலைத் தொடர்ந்து ஆபத்துக்கால ஊக்குவிப்பு அலவன்ஸ் வழங்குவதென முடிவெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருறது.

வடக்கு கிழக்கு மாகாண ஆசிரிய நியமனங்கள் சம்பந்தப்பட்ட நேர்முகப்பரீட்சைகள் யாவற்றையும் அந்தந்த மாவட்டங்களிலேயே நடாத்துவது என்றும் 1991ம் ஆண்டு அக்டோபர் மாதம் தொடக்கம் தீவகப்பகுதி அதிபர்கள், ஆசிரியர்களுக்கு வழங்கப்படாமல் இருக்கும் சம்பளப் பணத்தை எதிர்காலத்தில் மாதாமாதம் வழங்குவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் அறியவருகின்றது. (109)

## 22-வது ஆண்டு நினைவஞ்சலி

ஓம்

22-வது ஆண்டு நினைவஞ்சலி

11-12-92 (இன்று)



அமரர்

### சிவஸ்ரீ மு. சிவகடாக்ஷக்குருக்கள்

அவர்கள்

காசி விநாயகரின் கடாட்சம்
பெற்ற கருணை வள்ளலே! ஞானோதய
சபை மூலம் சமயத்தையும்
இசையையும் வளர்த்த வித்தகரே!
ஆண்டு இருபத்திரண்டு சென்றாலும்
எம்மனோர் மனதில் தங்கள் நினைவு நீங்காது.
எமது துன்பங்கள் நீங்கக்
காசி விநாயகரின் அருளைப் பெற்றுத் தருவீராக!

டி சபையின்

இயக்குநர்களும், முன்னாள் மாணவர்களும்,
பாலர் ஞானோதய சபை,
தெல்லிப்பழை. (இ-7047)

நாவலர்

## குருபூசையும் நூல்வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

'ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசையும் நூல்வெளியீடும் எதிர் வரும் செவ்வாய்க்கிழமை காலை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

சைவப்பெரியார் க. சிவபாதசுந்தரம் எழுதிய 'ஆறுமுகநாவலர்' என்ற ஆங்கில நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு நூல் வெளியிடப்படும்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

சைவ வி. வி. சங்க

## ஒப்பீட்டு அறிக்கை

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கம் பெப்ரவரி மாதம் தொடக்கம் நவம்பர் மாதம் வரைக்கான செயற்பாடுகள் பற்றிய ஒப்பீட்டு அறிக்கை அண்மையில் சேகரிக்கப்பட்டது. இந்த அறிக்கை சங்கத்தின் எதிர்காலத்திற்கு நல்ல வரப்பிரசாதம் என்று அங்கத்தினர்களால் பாராட்டப்பட்டுள்ளது.

சங்கம் 69வது வருட சேவையினை பூர்த்தி செய்து 70 வது வருட சேவைகளை டிசம்பர் மாதம் 31ம் திகதி தொடங்குகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (சு)

## விநாயகர் விரதம் ஆரம்பம்

(கொழும்புத்துறை)

யாழ்.குடாநாட்டில் உள்ள பெரும்பாலான விநாயகர் ஆலயங்களில் நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகியது. தொடர்ந்து 21 தினங்கள் விநாயகர் விரதமும். பிள்ளையார் பெருங்கதை படிப்பும் இடம் பெறும்.

விஷேட அபிஷேகம் பூசை வழிபாடுகளை அடுத்து பிள்ளையார் கதை படிப்பு நடைபெறும். எதிர்வரும் 30-ம் திகதி புதன்கிழமை நண்பகல் விநாயக ஷஷ்டி விரதம் முடிவும் பிள்ளையார் பெருங்கதை முடிவும் இடம் பெறும். (154)

## பரீட்சை மேற்பார்வையாளருக்கு வேதனம் அதிகரிப்பு

(உடுவில்)

கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண உயர்தர பரீட்சைகள், ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில பரீட்சை போன்ற பரீட்சைகளில் கடமையாற்றும் ஊழியர்களின் வேதனங்கள் கடந்த ஆகஸ்ட் மாதத்தில் இருந்து அதிகரிக்கப்பட்டிருப்பதாக கல்வித்திணைக்கள பரீட்சைப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

புதிய அறிவிப்பின்படி ஒவ்வொரு தரத்திலும் உள்ள ஊழியர்களின் ஒரு நாளைய வேதனம் பின்வருமாறு அமையும்.

பரீட்சை மேற்பார்வையாளர் 175 ரூபா. நிரந்தர நோக்குனர் 150 ரூபா சாதாரண நோக்குனர் 125 ரூபா சிற்றூழியர்கள் 75 ரூபா.

இணைப்பு நிலைய நிர்வாக அலுவலர் ரூபா 225. உதவி நிர்வாக அலுவலர் ரூபா 175 சிற்றூழியர் ரூபா 100. சேகரிப்பு நிலைய நிர்வாக அலுவலர் ரூபா 250. உதவி நிர்வாக அலுவலர் ரூபா 175. எழுதுவினைஞர்கள் ரூபா 125. சிற்றூழியர்கள் ரூபா 100.

பரீட்சை மண்டப ஒழுங்குகளுக்காக ஒன்று முதல் 60 பரீட்சார்த்திகளுக்கு 75 ரூபாவும் 60 க்கு மேற்பட்ட பரீட்சார்த்திகளுக்கு 150 ரூபாவும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

## இன்று

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். தலைமைக்கிளையின் சஞ்சிகை வெளியீடும் ஒன்று கூடல் வைபவமும் இன்று 11-ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 00 மணியளவில் யாழ். கிளைத் தலைவர் டாக்டர் த. சிங்கராசா தலைமையில் யாழ். கிளை தலைமையலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

கல்கத்தாவில்

## மீண்டும் ஊரடங்கு

(புதுடில்லி)

அயோத்தி சம்பவம் தொடர்பாக கல்கத்தாவின் பெரும்பாலான பகுதிகளில் மீண்டும் ஊரடங்கு உத்தரவு நேற்று முதல் அமுல் நடத்தப்படுவதாக மேற்கு வங்க அரசு அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு மீண்டும் வன்முறைகள் தலைதூக்கியதையடுத்தே மேற்கண்ட உத்தரவு அமுல்படுத்தப்படுவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## புதிய வகுப்பறை

(உடுவில்)

நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலையில் மூன்றாண்டுக் கல்வித்திட்டத்தின் கீழ் புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனத்தின் உதவியுடன் 100 அடி X 16 அடி கொண்ட வகுப்பறை அமைக்கப்பட்டுள்ளது. (109)

## ஜெயந்தி விழா

(யாழ்ப்பாணம்)

அன்னை ஸ்ரீ சாரதாதேவியாரின் 140 -ம் ஜெயந்தி விழா எதிர்வரும் 16-ம் திகதி புதன்கிழமை பிற்பகல் இடம் பெறவுள்ளது.

திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் இராமகிருஷ்ணாலயத்தில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்ச்சியில் பஜனை, பூசை நிகழ்ச்சிகளும் மற்றும் கலைநிகழ்ச்சிகளும இடம் பெறும்.

யாழ் பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் திருமதி கிருஷ்ணவேணி நோபேட்டின் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது. (க)

# மசூதி கட்டும் பேச்சுக்கே இடமில்லை இராமர் கோவில் விஸ்தரிக்கப்படும்

## பி. ஜே. பி. அறிக்கை

(புதுடில்லி)

அயோத்தி பாபர் மசூதி பிரச்னையை காரணம் காட்டி முஸ்லிம் நாடுகளில் சுமார் 50 இந்துக்கோவில்கள் தீயிட்டு கொழுத்தப்பட்டும், தகர்க்கப்பட்டும், குண்டுத் தாக்குதலுக்கும் இலக்காகியுமுள்ளன.

இவ்வாறு பாரதீய ஜனதா கட்சி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கை மேலும் குறிப்பிடுகையில்,

அயோத்தியில் இராமர் ஆலயம் இருந்தஇடத்திலேயே மசூதி கட்டப்பட்டது. அக்கால முஸ்லிம் மன்னர்கள் இந்த அழிவை இந்துக்களுக்கு எதிராக மேற்கொண்டனர்.

இந்தியாவில் 85 வீதமான இந்துக்கள் உள்ளனர். அவர்கள் தமது உரிமையைத்தான் அயோத்தியில் மீண்டும் பெற்றனர். ஆனால் முஸ்லிம் நாடுகளில் எந்தவித எதிர்ப்பிலும் ஈடுபடாத இந்துக்கள் தாக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர். ஒரு மசூதிக்காக 50 இந்துக்கோவில்கள் மிக மோசமாக உடைக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கெல்லாம் யார் பொறுப்பேற்பது?

மசூதி உடைக்கப்பட்டதற்கு ஹர்த்தாலும், தேசிய துக்கதினமும் அனுஷ்டிப்போர் 50 இந்துக்கோவில்கள் உடைக்கப்பட்டதற்கு என்ன செய்யப்போகிறார்கள். அங்கும் ஹர்த்தாலையும், தேசிய துக்கதினத்தையும் கோருவார்களா!

மீண்டும் மசூதி கட்டப்படும் என்ற பேச்சுக்கே இடமில்லை. இங்கு அமைக்கப்பட்டுள்ள இராமர் ஆலயம் பெருமளவு விஸ்தரிக்கப்படும் எனவும் அவ்வறிக்கை குறிப்பிட்டுள்ளது. (சி)

# அயோத்தி சம்பவம் குறித்து ஐ. நா. செயலர் கவலை

(நியூயோர்க்)

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட சம்பவம் குறித்தும் அதன் தொடர்ச்சியாக இந்தியா மற்றும் அதன் அயல் நாடுகளான பாகிஸ்தான், பங்களாதேஷில் ஏற்பட்ட வன்செயல்கள் குறித்தும் ஐ நா பொதுச்செயலர் டாக்டர் பூத்ரோஸ் காலி ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளார்.

நேற்று முன் தினம் இது தொடர்பாக விடுத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கவலை தெரிவித்துள்ளார்.

வழிபாட்டு இடங்கள் சேதப்படுத்தப்படுவது குறித்தும், மனித உயிர்கள் தேவையற்ற விதத்தில் அழிக்கப்படுவது குறித்தும் அவர் கண்டனம் தெரிவித்துள்ளார். (க)

# அயோத்தி பற்றி சில விபரங்கள்

(லக்னோ)

தற்போது பிரச்சனைக்குள்ளாகி உலகின் கவனத்தை ஈர்ந்துள்ள பாபர் மசூதி பற்றி சில தகவல்கள்: அயோத்தி ஒரு சிறுநகர் இங்கு சுமார் 4000 மக்களே வசிக்கின்றனர். இங்கு இந்துக்களும், முஸ்லீம்களும் கலந்து வாழ்கின்றனர் இதுவரையில் இவர்களிடையே எதுவித பிரச்சனையும் ஏற்படவில்லை.

அயோத்திக்கு ஒழுங்கான போக்குவரத்துக்கூட இல்லை. யாத்திரீகர்களுக்கான டூரிஸ் பஸ் சேவை மட்டுமே நடைபெறுகிறது.

அண்மைக்காலத்தில் யாத்திரீகர்களின் வருகை அதிகரிப்பால் இராமர் லஷ்மணர் படங்கள் ஸ்டிக்கர்களின் விற்பனை அதிகரித்துள்ளது. இவற்றை விற்பனை செய்பவர்களில் பெரும்பாலானோர் முஸ்லிம்கள்.

இங்கு வாழும் முஸ்லீம்களின் பிரதான தொழில் துணி நெய்தல் வீதிகளில் முஸ்லிம் பெண்கள் நெய்த துணிகளை காணலாம். பாபர் மசூதிக்கு அருகில் மிகப்பழைய கட்டிடம் ஒன்று உள்ளது. இது சீதை குடியிருந்த இடம் என கூறப்படுகிறது. இங்கு சீதை சந்நிதி உள்ளது. சீதை இங்கு தான் உணவு சமைத்து இராமருக்கு பரிமாறியதாக கூறுகிறார்கள். சீதை சந்நிதியின் முன்னால் இரண்டு ஒற்றை அடுப்புகளும் ஒரு சப்பாத்திக் குழவியும் காணப்படுகின்றன

நகரின் நடுவே ஒரு பிரமாண்டமான ஆஞ்சநேயர் கோயில் உள்ளது. இக்கோயில் ஆகம விதிப்படி அமைந்த கோயிலாகும். (159)

# தீவகத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒய்வூதியம் மீண்டும் செயலகத்தில் வழங்கப்படும்

(மானிப்பாய்)

தீவுப்பகுதியில் இராணுவத்தின் பிடியில் சிக்குண்ட 211 பேரின் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் தற்போது யாழ். செயலகத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது.

90ம் ஆண்டு ஏப்ரலின் பின்னர் இவர்களுக்கு ஓய்வூதியங்கள் புனர்வாழ்வு அமைச்சின் மூலம் படையினரால் வழங்கப்பட்டு வந்தது.

இவ்வருடம் ஜூலை மாதம் முதல் மீண்டும் யாழ். செயலகத்தினால் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (71)

# மாணவர் முத்திரைக்கு பொருள்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

மாணவர் உணவு முத்திரைக்கு யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம் இம்முறை சீனி, கடலை, குரக்கன்மா, கோது அரிசி, தீட்டல் பச்சை அரிசி ஆகிய பொருட்களை வழங்குகின்றது.

நாளை 12ம் திகதி முதல் 21ம் திகதி வரைஜூன், ஜூலை செப்டம்பர் மாதங்களுக்கான மாணவர் உணவு முத்திரைகளுக்கு பொருட்கள் வழங்கப்படவுள்ளது.

மேற்படி விநியோகத்தை முன்னிட்டு எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களிலும் யாழ். ப நோ. கூ; சங்கக்கிளைகள் அனைத்தும் வழமைபோல் திறந்திருக்குமென இச்சங்கத் தலைவர் திரு. சு. சிறில் தெரிவித்தார். (வி)

## கோழிக்குஞ்சு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் காமதேனு பண்ணையில் வைத்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் சில வறுமைப்பட்ட குடும்பங்களுக்கு கோழிக்குஞ்சுகளை வழங்கியுள்ளது.

இன்வைபவத்தில் தாவடி சிற்றூர் பொறுப்பாளர் திரு. கலியுகன் கோழிக்குஞ்சுகளை வழங்கினார்.

புலமைப்பரிசில்

## பரீட்சையில் சித்திபெற்றோர்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் 85 பேர் ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

வவுனியா இறம்பைக்குளம் மகாவித்தியாலய மாணவி செல்வி ஆர். தர்ஷினி 189 புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தின் முதலாவது மாணவியாக சித்தியடைந்துள்ளார். (71)

0 0 0

(யாழ்ப்பாணம்)

5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் நீர்வேலி சீ.சீ. த. க. பாடசாலை மாணவன் ஆழ்வாப்பிள்ளை இளமாறன் 181 புள்ளிகளைப் பெற்று கோப்பாய் கல்விக் கோட்டத்திலேயே முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இதேகல்லூரியைச் சேர்ந்த சுகுமார் சுமன் 151 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் ஒருவரும் நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தில் 5 பேரும் மேற்படி புலமைப் பரீட்சையில் சித்திபெற்றுள்ளனர். (க)

# இராசி பலன்

11-12-1992

(தமிழுக்கு கார்த்திகை 26)

வெள்ளிக்கிழமை

துதியை பி. இ. 3-32 வரை, திருவாதிரை பி.இ. 3-07வரை சித்தயோகம், இராகுகாலம் 10-50 முதல் 12-20 வரை, சுப நேரம் காலை 6-20 முதல் 7-50 வரை.

மேடம்: புத்திசாமர்த்தியம், முயற்சி வெற்றி, குடும்பசுகம்.

இடபம்: பலவீத துன்பம், மனவெறுப்பு, அலைச்சல்.

மிதுனம்: தொழில்பாராட்டு பணவரவு, சுபகாரியம்.

கடகம்: அவமதிப்பு, குடும்ப முறுகல், காரியத்தடை.

சிங்கம்: புதிதான இடம். நண்பர் வருகை, தெய்வீகச் செலவு.

கன்னி: பெண்கள் உதவி, புத்திரர் பெருமை, காரிய சித்தி.

துலாம்: தவறான நட்பு, அடிமைப்படல், பணமுடை.

விருச்சிகம், உறவினர் சச்சரவு, வீண்செலவு, யோசனை.

தனுசு; புதியதொழில், மனமகிழ்ச்சி, இனசன வருகை,

மகரம்: குடும்ப நன்மை, நற் செய்தி, இனிய உறவு.

கும்பம்: மனைவிக்குநோய், பெரியார்பகை, அமைதி குன்றல்.

மீனம்: உடம்பில் களைப்பு, பயனற்ற முயற்சி, தவறான முடிவு.

— ஜோஸ்யர்

# யுத்த நிறுத்த செய்திக்கு அரசு தரப்பில் மறுப்பு

(கொழும்பு)

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தற்காலிக யுத்த நிறுத்தம் குறித்து பேச்சுவார்த்தை நடைபெறுவதாக அண்மைய 'திவயின' என்னும் சிங்களப் பத்திரிகையில் வெளியான செய்தியை அரசாங்கம் முற்றாக மறுத்துள்ளது.

குறிப்பிடப்பட்ட செய்தி 'இந்து' பத்திரிகையில் வெளியிடப்பட்டதாகவும் இச்செய்தியை மேற்கோள்காட்டி 'திவயின' செய்தி வெளியிட்டதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

அரசு மேலும் தெரிவிக்கையில் வடக்கு - கிழக்கு பிரச்சனைக்கு தீர்வுகாண நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் முடிவுகளின்படியே அரசாங்கம் செயல்படும் என்றும் தெரிவித்துள்ளது.

வடக்கு கிழக்கில் இராணுவ நடவடிக்கை மட்டுப் படுத்தப்படவில்லை யென்றும் கடந்த காலங்களைப் போன்று அவை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அரசு தெரிவித்துள்ளது. (க)

# 13-ம் திகதி உதைபந்தாட்டம்: யாழ்.— பருத்தித்துறை தெரிவு அணிகள் மோதும்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக் தெரிவுக்கோஷ்டியும், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் தெரிவுக்கோஷ்டியும் மீண்டும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ் நகரில் மோதுகின்றன.

மேற்படி இரு அணிகளுக்குமிடையில் நெல்லியடி ம. ம. வில் நடைபெற்ற போட்டியில் யாழ். லீக் கோஷ்டி வெற்றி பெற்றது.

ஆனால் யாழ் நகரில் 13ம் திகதி நடைபெறவிருக்கும் போட்டியில் இரு அணிகளிலும் புதிய பல வீரர்கள் அங்கம் வகிக்க இருப்பதினால் இரு அணிகளுக்குமிடையில் பலத்த போட்டி நிலவுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறவிருக்கும்இப் போட்டிக்கு பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் தலைவர் பிரதம அதிதியாகக்கலந்து கொள்கின்றார். (வி)

## மாதாந்த உதவிப்பணம்

(நெல்லியடி)

கரவெட்டி உதவிஅரசாங்க அதிபர் பிரிவில், நவம்பர் மாதத்திற்கான அரசினரின் மாதாந்தஉதவிப்பணம் வழங்கப்பட்டு வருகின்றது.

## கிறிஸ்மஸ் ஒளிவிழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி கத்தோலிக்க மாணவ மன்றத்தின் கிறிஸ்மஸ் ஒளிவிழாவும் பரிசளிப்பு விழாவும் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. இவ்விழாவில் பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு நேசநாயகம் அடிகளார் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார். (52)

## வலைகள் திருட்டு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறையைச் சேர்ந்த மீனவர் ப. குசேலராசாவின் ரூபா 3500 பெறுமதிமிக்க நான்கு நைலோன் வலைகள் கடந்த திங்கட்கிழமை இரவு கடலில் தொழிலுக்குப் போடப்பட்டிருந்த போது திருடப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை கடலோரப் பகுதியில் வலைத்திருட்டுகளில் தொடர்ந்து திருடர்கள் ஈடுபட்டு வருவதாக மீனவர்கள் பலர் ஆழ்ந்த கவலையும் மனவேதனையும் அடைந்துள்ளனர். (154)

யோகபுரம்

## கிராமத்திற்கு கிணறு வசதி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் கைத்தொழில் பகுதியினர் மாவீரர் வாரத்தினை முன்னிட்டு உரும்பராய் யோகபுரம் கிராம மக்களுக்கு புதிய குழாய்க்கிணறு ஒன்றினை அமைத்தும், மேலும் இரண்டு கிணறுகளை திருத்தியும் கொடுத்துள்ளனர்.

இக்கிணறுகள் அனைத்தும் மாவீரர் சின்னவனின் பெற்றோர் வைபவரீதியாக மக்களின் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டது. உரும்பிராய் பிரதேசப் பொறுப்பாளர் திரு. பாண்டியன் மற்றும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினரும் அப்பிரதேச மக்களும் கலந்து கொண்டனர்.

## நிலச்சரிவினால் 210 பேர் பலி

(லண்டன்)

பொலிவியாவின் வடக்கு தங்கச் சுரங்கப் பகுதியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட பாரிய நிலச்சரிவில் 210 பேர் பலியாகியுள்ளனர். நூற்றிற்கு மேற்பட்டவர்கள் காணமல் போயுள்ளனர். (க)

உ. அ. அதிபர்

## பிரிவுகளில் குழாய்க் கிணறு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சகல உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுக்கும் ஒரு குழாய்க்கிணறு அமைக்கும் செயல்திட்டம் ஒன்றை சர்வோதயம் அமைப்பு ஆரம்பித்துள்ளது. (154)

## நன்கொடைப் பணம்

(நெல்லியடி)

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர்பிரிவில் ஜூலை ஆகஸ்ட் செப்டம்பர் மாதங்களுக்கான தொழுநோய், காசநோய், புற்றுநோய் ஆகியோரின் நன்கொடைப்பணம் அவ்வப் பகுதி தபாலகம்மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. (160)

## அன்பளிப்பு

(கொழும்புத்துறை)

யாழ். கொழும்புத்துறை இந்துமகாவித்தியாலய வளர்ச்சிக்காக ஓய்வுபெறும் அதிபர் கா. கணேசதாசன் அபிவிருத்திச்சபைப் பொருளாளரிடம் பதினையாயிரம் ரூபாவை வழங்கினார். (154)

## ஆங்கில எழுத்துப் போட்டி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட மட்டத்தில் ஆங்கில எழுத்துக்கூட்டல் போட்டி, ஆங்கில சொற்களை வசனத்தில் அமைக்கும் போட்டி ஆகிய போட்டிகள் இம்மாதம் 19ம் திகதி மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. (71

## சமஷ்டி நிராகரிப்பு:
# சிறிமா மீது பிரெஞ்சு பத்திரிகை கண்டனம்

(கொழும்பு)
இலங்கையின் இனப்பிரச்னைக்கு அரசியல்தீர்வு காணுமுகமாக சமர்ப்பிக்கப்பட்ட 'சமஷ்டி யோசனைகளை நிராகரித்த எதிர்க்கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் செயலை பிரெஞ்சுப் பத்திரிகையான 'றிவ் யூன்டி ஜெறிவாடோ' கண்டித்து செய்திவெளியிட்டுள்ளது.

அப்பத்திரிகை அதன் நவம்பர் 29ம் திகதிய வெளியீட்டிலேயே இவ்வாறான கண்டனத்தை தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகை இதுகுறித்து மேலும் தெரிவித்திருப்பதாவது: ஆட்சிமுறைக்கு ஆதரவாக சிங்கள பெரும்பான்மை இனத்தவர் மத்தியில் உருவாக இருந்த முடிவை திருமதி சிறிமாவோபண்டாரநாயக்கா சிதைத்துவிட்டார்.

அவரின் குறிப்பிட்ட நடவடிக்கைமுலம் சமஷ்டி ஆட்சிமுறையை ஐ. தே. கட்சியினர் ஏற்றுக்கொள்ளச்செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சியும் தடைப்பட்டுள்ளது. (க)

## தரம் இரண்டு பரீட்சை

(யாழ்ப்பாணம்)
அரச இலாகாக்களிலும், திணைக்களங்களிலும் தற்போது சேவையாற்றும் ஊழியர்கள், கணக்குப்பதிவாளர்கள் தரம் இரண்டு 'அ' விற்கான பரீட்சை இம்மாதம் 15-ம் திகதி திட்டமிட்டபடி கொழும்பில் நடைபெறுமென்று தெரிவிக்கப்படுகிறது.

### சாவகச்சேரியில்
(1ம் பக்கத் தொடர்ச்சி)
இப்பரீட்சைக்கெனதோற்றுவதற்கெனகாலையிற்புறப்பட்ட மாணவர்கள் விமானங்களின் பேரிரைச்சலை அடுத்து செய்வதறியாது வால்போனபோக்கிலே ஓடத்தொடங்கினார்கள்.

விமானங்கள் சென்ற பின்னர் மீண்டும் பரீட்சை மண்டபங்களுக்குவந்த மாணவர்கள் குழம்பிய மனதுடன் பரீட்சைக்குத் தோற்றினார்கள். (ரி-155-159-157)


## மலிவு விற்பனை

நத்தார் - புதுவருட பண்டிகை நாட்களை முன்னிட்டு 1-12-92 முதல் 31-12-92 வரை எமது நிலையத்தில் சகலவிதமான புடவை வகைகளையும் தைத்த ஆடை வகைகளையும்

மலிவு விலையில் விசேட கழிவுடன்

பெற்றுக்கொள்ளலாம்.

## லண்டன் புடவை நிலையம்,

249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(ஏ-2636)


## 1-ம் ஆண்டு
# நினைவஞ்சலி

()
மலர்வு:
21
|
09
|
1960
()



()
உதிர்வு:
24
|
11
|
1991
()

திதி: 11-12-1992

## திருமதி
# மகாதேவன் சந்திரவதனு
## (சந்திரா)

ஆண்டொன்று ஓடி மறைந்தாலும் உன் அருமை முகம் எம்மை விட்டு மறையவில்லை அம்மா.

நீங்காத உன் துயரால் துடிக்கின்றோம்
அப்பு என்று அழைப்பாயனே
ஆறுதல் வார்த்தை சொல்வாயனே.

என் செல்வமே உன் ஆத்மா சாந்திபெற என்றென்றும் இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

நீங்காத நினைவுகளுடன் நினைவு கூரும்
குடும்பத்தினர்
பெற்றோர், கணவன், பிள்ளைகள்,
சகோதர சகோதரிகள்,
மச்சான், மச்சான்மார்,
மருமக்கள், பெறுமக்கள்.

"இரத்தினமகால்",
சிலம்புப்புளியடி,
சங்கானை.

(சி-7054)

## இன்று

(யாழ்ப்பாணம்)
இந்து இளைஞர் பேரவையின் யாழ் மாவட்டத் தலைவர் வெ. கெ. தனபாலனினால் மேற்கொள்ளப்பட்டு வரும் வெள்ளிக்கிழமை மௌனவிரதத்தின் முதலாம் ஆண்டு நினைவு தினம் இன்று சுந்தர் மடம் குமாரசாமி வீதியில் உள்ள வேதாந்த மடத்தில் இடம்பெறவுள்ளது.

ஸ்ரீமத் சோமஸ்கந்தவேல் சுவாமிகள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நல்லை குருமகா சந்நிதானம் ஸ்ரீமத் சோமஸ்கந்த ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கவுள்ளார். (சு)

### களுதாவளை
(1ம் பக்கத் தொடர்ச்சி)
சுற்றிவளைத்து வீடுவீடாக தேடுதல் நடத்தி பலரைக்கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்ட அனைவரும் களுவாஞ்சிக்குடி அதிரடிப்படை முகாமிற்கும், துறைநீலாவணை அதிரடிப் படைமுகாமிற்கும் கொண்டு செல்லப்பட்டனர்.

இதேவேளை கடந்த சனிக்கிழமை மட்டு ஊறணிப்பகுதியும் அதிரடிப்படையால் சுற்றிவளைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ரி)

### அயோத்தி
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
பாடசாலைகள், அரச நிறுவனங்கள் எதுவும் தமிழகத்தில் நேற்று இயங்கவில்லை. வீதிகளில் வாகனங்கள் ஓடவில்லை. வீதிகளில் சனநடமாட்டமில்லாது இருந்தபோதும் ஆங்காங்கே ஒருசில சைக்கிள்களை காணக்கூடியதாக இருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

பொதுவேலை நிறுத்தத்தையொட்டி ஆகாய வெளிகளில் விமான ஓட்டமும் நடைபெறவில்லை. ரெயில்களும் ஓடவில்லையென்றும் இவ்வேலை நிறுத்தம் முடிவுற்றபோது அடைத்து வைக்கப்பட்ட காற்று வெளிப்பட்டதுபோல் வழமையான நிகழ்வுகளுக்கு தமிழகம் திரும்பியதாக தெரிவிக்கப்பட்டது. (ரி)

### நுணாவிலில்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
நுணாவில் குளம், முருகன் கோவிலுக்கு சிலயார் தூரத்தில் நடத்தப்பட்ட ரொக்கெட் தாக்குதலில் நான்கு பிள்ளைகளின் தாயாரான திருமதி பரமநாதன் சாந்தநாயகி (33 வயது, மட்டுவில் வடக்கு) என்பவர் வயிறு பிளந்த நிலையில் ஸ்தலத்திலேயே துடிதுடித்து பலியானார். இதே இடத்தைச் சேர்ந்த வரதராசன் அருணு (03 வயது), சிவதேவி வரதராசன் (12 வயது), கிருஷ்ணன் ஜீவாகரன் (19 வயது), பாலசிங்கம் சுவேந்தினி (21 வயது தர்மரட்ணம் நிசாந்தன் (07 வயது, நுணாவில்மேற்கு) எஸ். சந்துரகாந்தன் (12 வயது), எஸ். சான்ஸ் (04 வயது), திருமதி பூபாலச்சந்திரன் சந்திரமலர் (55வயது மயிலிட்டி), சிவராசா விஜிதா (12 வயது) ஆகியோர் உடபட பலர் படுகாயமடைந்தனர்.

மட்டுவில் தெற்கில் நடத்தப்பட்ட தாக்குதலில் இதே இடத்தைச் சேர்ந்த கந்தையா முருகேசு (82 வயது) படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில அனுமதிக்கப்பட்ட சில நிமிடங்களில் பலியானார். இத்தாக்குதலிலும் பலர் காயமடைந்ததாகத தெரிவிக்கப்படுகிறது.

நுணாவில்குளம் முருகன் ஆலயம், நுணாவில் பகுதியிலுள்ள ஜெகதீஸ்வரக் குருக்கள், இராசையா யோகேஸ்வரி, திருமதி தனேஸ்வரி ஆகியோரின் வீடுகள் உட்பட மட்டுவில் சிவன்கோவிலடியிலும் பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

சாவகச்சேரி பகுதியில் கடந்த இருவாரங்களில இரண்டாவது தடவையாக சுப்பசொனிக் விமானங்கள் தாக்குதல் நடத்தியது குறிப்பிடத்தக்கது. [155-56-ரி]

### புனர்நிமாண
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
ரதின நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த உதவித்தொகையில் 17 கோடி 50 லட்சம் அமெரிக்க டொலர்கள் ஏற்கனவே கிடைத்துள்ளன என்று அவர் மேலும் கூறினார். (சு)

### இனப்பிரச்னைக்கு
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
வந்தவுடன் மட்டக்களப்பிற்கு விஜயம் செய்து அரச அதிபர் உட்பட பலரைச் சந்தித்ததுடன் அப்பகுதியில் தமிழ் அகதிகள் தங்கியிருக்கும் அகதி முகாம்களுக்கும் நேரடியாக விஜயம் செய்தார்.

இலங்கையிலுள்ள நிலைமைகளை நன்கறிந்து கொண்ட பின்னரே தமிழ் அகதிகளை கனடாவிலிருந்து திருப்பி அனுப்புவது சாத்தியமற்றது எனத்தாம் முடிவு செய்ததாகவும் அவர் கூறினார். [தி]

### வடக்கு- கிழக்கு
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மின்சார ஊழியர்களுக்கு பாதிக்கப்பட்ட பகுதிகளில் பணிபுரியும் ஏனைய அரச ஊழியர்களுக்கு வழங்கப்படுவதுபோல ஆபத்து அலவன்ஸ் வழங்கபபடவேண்டும் என்று எரிபொருள் மின்சக்தி அமைச்சர் சந்திரா பண்டாரவிடமும் அதன் தலைவரிடமும் மின்சாரசபை ஊழியர்களும் கோரிக்கைவிடுத்ததைஅடுத்து இந்த அலவன்ஸ் வழங்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (71)

### மனித உரிமை
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
குண்டுகளை வீசியும், குண்டாந்தடிப் பிரயோகம் செய்தும் அவர்களைக் கலைத்தனர்.

கொழும்பு கொம்பனித்தெருவில் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் அப்போது அந்தப்பகுதி ஒரு சிறிய யுத்தகளமாக தென்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் அந்தப் பகுதியில் வசித்த பொதுமக்கள் மீதும்வீதியால் சென்றுகொண்டிருந்தோர் மீதும் பொலிசாரும் கொலைஞர் படையும் தாக்குதல்களை நடத்தியது.

அன்னையர் முன்னணியின் சத்தியாக்கிரஹம் கொழும்பு டிமெல் பூங்காவில் நடத்தப்படவிருந்தது எனினும் பொலிசார் அன்னையர் முன்னணியை டிமெல் பூங்காவுக்குள் அனுமதிக்கவில்லை. அவர்கள்மீது கண்ணீர் குண்டுகளை வெடிக்கவைத்ததுடன் குண்டாந்தடிப் பிரயோகமும் செய்தனர்.

இந்தச் சம்பவத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த திரு மஹிந்த ராஜபக்ஷவும், நவசமசமாஜக்கட்சி திரு. வாசுதேவ நாணயக்கார ஆகியோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

## பரீட்சை

(கொழும்புத்துறை)
கோப்பாய் பலாலி ஆசிரியர் கலாசாலைகளில் இறுதிப் பரீட்சைகள் இம்மாதம் 18ம் திகதி வெள்ளிக்கிழமை முதல் 23ம் திகதி புதன்கிழமைவரை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (154)

### குஜராத்
(1ம் பக்கத் தொடர்ச்சி)
வாசிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் அயோத்தியப் பிரச்னையை அடுத்து இதுவரை இறந்தவர்களின் எண்ணிக்கை 800ஐயும் தாண்டியுள்ளதாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது.

### திலகர்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
கிரமசிங்க, ஜனாதிபதியின் வெளிநாட்டு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் ஆகிய இருவரும் நேற்று தெரிவித்தனர்.

வடக்கு- கிழக்குப் பிரச்னைக்கு நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் மூலமாகவே தீர்வு காணப்படும் என்றும் அவர்கள் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தனர் (சு)

### பாரிய தாக்குதல்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)
தாக்குதல் இன்னும் தொடர்கின்றன. விமானத்தாக்குதல் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்றும்.

கொழும்பில் விடுதலைப் புலிகள் தாக்குதலை நிறுத்தினால் இராணுவம் யாழ். குடாநாட்டில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளாது என்று இராணுவ அதிகாரிகள் விடுதலைப் புலிகளுக்கு உறுதி அளித்துள்ளதாக வந்துள்ள செய்திகளும் தவறானவை என்று அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். [சு]

### இலங்கையின்
(1ம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்பு பௌத்தலோக மாவத்தையிலுள்ள வாழும் மீட்பர் கிறிஸ்து பேராலயத்தின் 13-வது கொழும்பு அங்கிலிக்கன் ஆயராக கௌரவமைக்கல் ஜேம்ஸ் பெர்னேண்டோவை திருநிலைப் படுத்தும் வைபவத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இவ்வைபவத்தில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, ஜனாதிபதி ஆர். பிரேமதாச மற்றும் அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகியோரும் உரையாற்றினர்.

அவர் மேலும் பேசுகையில், இலங்கையில் நடக்கும் சம்பவங்களையிட்டு தான் துக்கப்படுவதாகவும் தவிர்க்கமுடியாத காரணங்களால் வடக்கு-கிழக்கிற்கு செல்ல முடியவில்லை என்றும் இலங்கையின் சமாதானம் ஒற்றுமைக்கு தமது அங்கிலிக்கன்சபை முழு ஒத்துழைப்பையும் வழங்கும என்றும் அவர் கூறினார். (ரி)

## மரண அறிவித்தல்

### சிற்றம்பலம் மாணிக்கவாசகர்

வடலியடைப்பைச் சேர்ந்த சிற்றம்பலம் மாணிக்கவாசகர் காலமானார். இவர் இளைப்பாறிய நீர்ப்பாசன இலாகா மேற்பார்வையாளரும் தற்போதைய வடலியடைப்பு புதருவை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை தலைவரும் ஆவார். நிர்மலா தேவியின் அன்புக் கணவரும், மஞ்சுளா தேவி (பிரான்ஸ்), சிவகணேசன் (பிரான்ஸ்), கருணாகரன் (சுவிஸ்), சியாமளாதேவி (நோர்வே). பிரபாகரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மெய்சன் கிருஷ்ணகுமார், பத்மநாதன் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற கார்த்திகேசு, காலஞ்சென்ற சுப்பிரமணியம், திருமதி ஆ. அன்னலட்சுமியின் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமைக்கிரியை அவரது இல்லத்தில் இன்று (11-12-92) வெள்ளிக்கிழமை பிற்பகல் 12-30 மணியளவில் நடைபெற்று விளாவெளி மயானத்தில் தகனம் செய்யபபடும் உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: நிர்மலாதேவி
(மனைவி)

(இ-7056)


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Registered as a New Paper at the General Post Office, Sri Lanka under Licence Number B/10336/8